பிற்பகல் 1)-00.

திரு. ஏ. அ. சுப்பராஜா: அரசாங்கம் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு கடன்களை வசூலிப்பதில் 'கோ ஸ்லோ ப்ராஸஸில்' செல்ல வேண்டுமென்று சொல்லியும்கூட இன்னும் ஸ்ரீவில்லிப்புத்தூர் தாலுகாவிலும், சாத்தூர் தாலுகாவிலும் கடன்களை வசூலித்துக்கொண்டிருப்ப தாகத் தெரிகிறது. அரசாங்கம் இந்த முக்கியமான விஷயத்தில் உத்தரவிட்ட பின்பும்கூட அதிகாரிகள் கடன்களை வசூலிப்பதில் கெடுபிடி செய்வதை இந்த அரசு அறியுமா? அமைச்சர் அவர்கள் இந்த நிலையை அறிந்து நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இரண்டு குற்றச்சாட்டுகளுமே சரியானவை அல்ல. அரசாங்கம் உத்தரவிட்டதே 25-ம் தேதி தான். அதற்குள்ளாக ஏதோ கொடுமைகள் பண்ணுகிருர்கள் என்று தகவல் வந்திருக்கிறது என்ருல் எப்படி என்று தெரியவில்லை. ஃபோனில் தகவல் வந்தது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகிருர்கள். ஃபோனில் பேசுகிற அளவுக்கு சௌகரியமான விவசாயிகள் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கிருர்கள். எங்கெங்கு நிலைமை சிரமமாக இருக்கிறதோ அங்கெல்லாம் கடன்களை ஒத்திவைக்க உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன, அதிகாரிகள் கண்டிப்பாக அரசாங்க உத்தரவின்படி நடவடிக்கைகளை எடுத்துக்கொள்வார்கள்.

(ஆ) மாயவரத்தின் கிழக்கே உள்ள கடைமடைப் பகுதிகளுக்கு பாசன வசதி பாதிக்கப்படுவதுகுறித்து.

திரு. பி. ஜயராஜ்: தலைவர் அவர்களே, காவேரியில் 80/1 மைலில் மாயவரத்தின் அருகில் எப்/5 என்ற இடத்தில் காவேரியில் ஒரு ரெகுலேட்டர் கட்டி மேலே புதுத் தலைப்பு கொடுத்து எப்/4 ஆறுபாதி கால்வாயில் சேர்த்து அதன்மூலம் பழங்காவேரி ஆறுபாதி வகையரு ஆயக்கட்டுக்கு தண்ணீர் வசதி செய்து கொடுப்பதால் கிழக்கே உள்ள கடைமடைப் பகுதிகளான 15,000 ஏக்கருக்குமேல் பாசன வசதி பாதிக்கப்படுவதைப் பற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவர் அவர்களே, பழங்காவேரி வாய்க்கால் மைல் 76/1-2-ல் காவேரி வலது கரையில் ஆரம்பமாகிறது. இதன் ஆயக்கட்டு 2,540 ஏக்கர். மாயவரம் எல்லையில் உள்ள இந்த வாய்க்காலின் ஒரு பகுதி மணல் மேடிட்டு மிகவும் மோசமான நிலையில் இருப்பதால் மாயவரம் எல்லைக்குக் கீழே உள்ள அதன் ஆயக்கட்டான 2,29² ஏக்கருக்குச் சரிவர பாசன நீர் வழங்க இயலவில்லை. இதன் ஆயக்கட்டுதாரர்கள் மேற்கண்ட குறையை நீக்கும்படி கோரியுள்ளனர். இத்திட்டம் தீர ஆராய்ந்து கீழ்க்கண்ட வேலைகளை செய்ய திட்டம் இடப்பட்டு உள்ளது:—

(1) குறிப்பிட்ட அளவு தண்ணீர் பழங்காவேரிக்கு வழங்க காவேரியின் குறுக்கே மைல் 80/1–530-ல் ரெகுலேட்டர் கட்டுவது.

(2) காவேரியின் வலது கரையில் மைல் 80/6–33 தலைப்பு கட்டுவது.

(3) பழங்காவேரியையும் மேல்கண்ட தலையமைப்பையும் இணைக்க இணைப்பு வாய்க்கால் வெட்டுவது.

இரண்டாவதாக குறிப்பிட்டுள்ள தலைப்பு, மாயவரம் எல்லைக்குக் கீழே உள்ள ஆயக்கட்டுக்கு மட்டும் போதுமான நீர் வழங்க கணக்கிடப் பட்டுள்ளது. மேலும் பழங்காவேரி, காவேரியிலிருந்து பிரியும் இடத்தில் விகிதாச்சாரப்படி தண்ணீர் வழங்க, இப்போதுள்ள கண்மாய் அளவைக் குறைக்க உத்தேசித்துள்ளது இதனுல் பழங்காவேரிக்கு அதிகப்படியான தண்ணீர் எடுததுக்கொள்வதை கட்டுப்படுத்த முடியும். இந்தக் கண்மாய் மூலம் சுமார் 542 ஏக்கருக்கு மட்டும் தண்ணீர் வழங்க உத்தேசிக்கப்

பட்டுள்ளது. ரெகுலேட்டர் கட்டுவதன் முக்கிய காரணமே, புதிதாகக் கட்டப்பட இருக்கும் மதகிற்கு பாசனத்திற்கு மட்டம் அளிப்பதற்காக மட்டுந்தான். மேலும் கட்டப்பட இருக்கும் ரெகுலேட்டர் இப்போதுள்ள கீழ் மட்ட நிலங்களுக்கு பாசன நீர் தட்டில்லாமல் வழங்குவதை கணக்கில் கொண்டே திட்டமிடப்பட்டுள்ளது. புதிதாக கட்டப்பட இருக்கும் ரெகுலேட்டரின் கீழே உள்ள ஆயக்கட்டுகளின் விஸ்தீரணம், 21,000 ஏக்கர் என கணக்கிடப்பட்டுள்ளது. இந்த 21,000 ஏக்கர் ஆயக்கட்டுகளுக்குத் தேவையான நீர் வழங்கப்படும். புதிய ரெகுலேட்டரினால் இந்நிலங்கள் பாதிக்கப்படாது, இப்புதிய ரெகுலேட்டரின் கீழ்மட்டம், ஆற்றில் தற்போதுள்ள மட்டத்திலேயே கட்டப்பட இருக்கிறது. ஆகையினால் இந்த ரெகுலேட்டரால் கீழே உள்ள பாசனக்காரர்களின் விவசாயம் பாதிக்கப்படும் என்று அஞ்சத் தேவையில்லை.

திரு. பி. ஜயராஜ்: தலைவர் அவர்களே, மாயவரத்தில் ஓடுகின்ற பழங் காவேரி மேடிட்டதன் காரணமாக புதிய ரெகுலேட்டரைக் கட்ட அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. பழங்காவேரி மேடிட்டிருப்பதை மாடர்னைசேஷன் செய்தால் ஏற்கனவே உள்ள பாசனத்திற்குத் தண்ணீர் செல்லாது. புதிதாக அரசாங்கத்தால் கட்டப்படுகின்ற ரெகுலேட்டர் சாதகமாக இருக்காது என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: நான் ஏற்கனவே குறிப்பிட்டதுபோல் ரெகுலேட்டர் கட்டப்படுகிறது. 21,000 ஏக்கருக்குப் பாதகம் ஏற்பட்டதுபற்றியெல்லாம் அரசாங்கம் தீர்க்கமாகப் பரிசீலித்த பிறகுதான் இந்த முடிவுக்கு வந்திருக்கிறது.

(4) உள்ளாட்சித் துறை அமைச்சர்மீது தான் சாட்டிய குற்றச்சாட்டிற்கான ஆதாரங்களைக் கூறும் வகையில் தன்னிலை விளக்கம் அளிக்க திரு. ராமச்சந்திர துரை அனுமதி கோரல்.

திரு. ரா. ராமச்சந்திர துரை: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 12-ம் தேதியன்று சட்டப் பேரவைத் துறை செயலாளர் அவர்களிடமிருந்து ஒரு கடிதம் வந்திருக்கிறது. அதிலே, "1969-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 23-ம் தேதியன்று நடந்த 1969–70-ம் ஆண்டிற்கான துணை நிதி மதிப்பீட்டிற்கான பொது விவாதத்தின்போது, நாமக்கல் கல்லூரிக்காக நன்கொடை வசூலித்தது குறித்து மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள்மீது ஒரு குற்றச்சாட்டைச் சாட்டியது நினைவிருக்கலாம். அதற்கான ஆதாரங்களைத் தாங்கள் தருவதற்குத் தயாராக இருப்பதாகக் கூறியிருப்பதும் நினைவிருக்கலாம். அதுபற்றிய ஆதாரங்கள் ஏதேனும் தங்களிடம் இருப்பின், அவற்றை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு 1970-ம் ஆண்டு மார்ச் மாதம் 20-ம் தேதிக்குள் கிடைக்கும்படி அனுப்பி வைக்குமாறு தாங்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்" என்று இருக்கிறது. அதற்கான ஆதாரங்களைக் கூறும் வகையில் 81-வது விதியின்கீழ் ஒரு தன்னிலை விளக்கம் கொடுக்கவேண்டுமென்று 20-ம் தேதி தங்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கிறேன். அந்த விளக்கத்தை இந்த அவையிலே படிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன என்று சொல்லுங்கள்.

திரு. ரா. ராமச்சந்திர துரை: பர்சனல் எக்ஸ்பிளனேஷன் 81–வது விதியின்கீழ் சொல்ல விரும்புகிறேன். இதைப்பற்றித் தங்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கிறேன். இப்போது அதை அவையிலே படிக்க விரும்புகிறேன்.

(திரு. மார்டின் அவர்கள் இருப்பிடத்தில் இருந்தபடி திரு. ராமச்சந்திர துரை அவர்களிடம் குறிப்புகளைக் கூறியபோது......)